# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590


**ஆணை நாள் - 18.06.2026**

**முன்னிலை**

## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 7299/F/2024**

திரு.மு.ரவிசங்கர் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர் /
கண்காணிப்பாளர்,
தமிழ்நாடு நகர்ப்புற
வாழ்விட மேம்பாட்டு வாரியம், கோட்டம்-5,
130, ஆர்.கே.மடம் சாலை,
மயிலாப்பூர்,
சென்னை-600 004. .. பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையம் 13.05.2026 அன்று பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் திரு.P.பிரபாகரன், கண்காணிப்பாளர், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், மயிலாப்பூர், சென்னை அவர்கள் ஆஜராகி மனுதாரருக்கு தகவல்கள் 10.06.2026 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக இனம் வாரியாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும் அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் திரு.N.செந்தாமரை கண்ணன், நிர்வாகப் பொறியாளர்(ஓய்வு), தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், மயிலாப்பூர், சென்னை அவர்கள் தனது எழுத்துமூல விளக்கத்தையும் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். தற்போதைய பொதுத்தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல் மற்றும் அப்போதைய மேல்முறையீட்டு அலுவலரால் வழங்கப்பட்ட விளக்கத்தினையும் இவ்வாணையம் ஏற்கிறது. இருப்பினும் கீழ்கண்ட உத்தரவினை பிறப்பிக்கின்றது.

**“மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(1)ன் கீழ் தாக்கல் செய்துள்ள 13.04.2024 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவிற்கு உரிய தகவல் வழங்கும் பொருட்டு உதவி இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர், இசட் பிரிவு, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், எண்.5, காமராஜர் சாலை, சென்னை அவர்களின் கடித ந.க.எண்.70/இசட்/2022, நாள் 25.03.2024 நாளிட்ட கடிதம் மூலம் சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் நிர்வாக பொறியாளர், கோட்டம்-5, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், எண்.212, இராமகிருஷ்ணாமடம் சாலை, மயிலாப்பூர், சென்னை அவர்களுக்கு மனுவினை மாற்றம் செய்யப்பட்ட நிலையில், இன்றைய விசாரணைக்கு ஆஜரான அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் / நிர்வாக பொறியாளர் (ஓய்வு) அவர்கள் மேற்காணும் கடிதம் அவருடைய பார்வைக்கு வரவில்லை என்று, அவர் சமர்ப்பித்த விளக்கத்தில் தெரிவித்தது தொடர்பாக, மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், எண்.5, காமராஜர் சாலை, சென்னை-5 அவர்கள் உரிய விசாரணையை மேற்கொண்டு அது தொடர்பான அறிக்கையினை 05.08.2026 அன்று தற்போதைய பொதுத்தகவல் அலுவலர், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், எண்.5, காமராஜர் சாலை, சென்னை-5 அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது.**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)
**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 7299/F/2024</u>**

பெறுநர்

மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்,
எண்.5, காமராஜர் சாலை,
சென்னை-5.

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர் /
கண்காணிப்பாளர்,
தமிழ்நாடு நகர்ப்புற
வாழ்விட மேம்பாட்டு வாரியம், கோட்டம்-5,
130, ஆர்.கே.மடம் சாலை,
மயிலாப்பூர், சென்னை-600 004.

**அப்போதைய பொதுதகவல் அலுவலர்**,
தமிழ்நாடு நகர்ப்புற
வாழ்விட மேம்பாட்டு வாரியம், கோட்டம்-5,
130, ஆர்.கே.மடம் சாலை,
மயிலாப்பூர்,
சென்னை-600 004.
**(தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் வாயிலாக)**

**அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர்,**
தமிழ்நாடு நகர்ப்புற
வாழ்விட மேம்பாட்டு வாரியம், கோட்டம்-5,
130, ஆர்.கே.மடம் சாலை,
மயிலாப்பூர்,
சென்னை-600 004.
**(தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் வாயிலாக)**

**மேல்முறையீட்டாளர்:-**

திரு.ரவிசங்கர்,
23, பாரதி நகர்,
மந்தைவெளிபாக்கம்,
சென்னை-600 028.

Copy to file: KR/PA